*KALANJIYAM – International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed academic journal*
e-ISSN: 2456-5148
Vol. 4 No. 05: February 2026

**களஞ்சியம்**
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: https://doi.org/10.63300/kijts04052026.46

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

# இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் சங்கரபதி கோட்டையின் பங்கு

*The Role of Sankarapathi Fort in the History of the Indian Freedom Struggle*

**முனைவர்.தி. பாலசுப்பிரமணியன்**[1,*]

[1] வரலாற்று ஆய்வாளர்,மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் இந்திய விடுதலை போராட்டத்திற்கு தமிழ் நாடு அளித்த பங்களிப்பு குறித்த ஆவணக் குழு உறுப்பினர், தமிழ் நாடு அரசு, செய்தி துறை தலைமை செயலகம் ,சென்னை.

***Corresponding author:** முனைவர்.தி. பாலசுப்பிரமணியன், balasubramanaian834@gmail.com

**ARTICLE INFO**

**Article history**
Received: 1 February 2026
Revised: 5 February 2026
Accepted: 8 February 2026

**Article ID**
KIJTS-2026-0045

**Peer review**
Double-blind peer review

**Keywords**
சங்கரபதி கோட்டை
மருது சகோதரர்கள்
வேலுநாச்சியார்
தென்னிந்தியக் கிளர்ச்சி
கி.பி. 1801
சிவகங்கைச் சீமை
வரலாற்றுப் பாரம்பரியம்

**ABSTRACT**

Sankarapathi Fort holds an important place in the history of the early anti-British resistance movements in Tamil Nadu. This study examines the origin of the fort, the significance of its name, and its association with the Sethupathi rulers. It highlights the role of the fort in the resistance history of Velu Nachiyar and the Marudhu Brothers. Historical accounts relating to the fort and the South Indian Rebellion of 1801 are also examined. Further, the study discusses military training, water management systems, architectural features, and underground tunnels associated with the fort. It also explores the historical significance of the fort and the restoration initiatives undertaken to preserve it. Finally, the study emphasises the need to protect Sankarapathi Fort and preserve its historical heritage for future generations.

**How to cite this article:** முனைவர்.தி. பாலசுப்பிரமணியன் (2026). இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் சங்கரபதி கோட்டையின் பங்கு. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *4*(05), 994. https://doi.org/10.63300/kijts04052026.46
**Copyright and licence:** © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.



**பழைய கோட்டை**

**(ஆய்வு செய்யும் போது)**



**புதிய கோட்டை புனரமைப்பு**

**நடைபெற்று வருகிறது**



**சங்கரபதி கோட்டை**

**(பீரங்கி குண்டுகளால் சேதமடைந்த கோட்டை)**

**ஆய்வுச் சுருக்கம்**

சங்கரபதி கோட்டை, தமிழகத்தின் தொடக்ககால ஆங்கிலேய எதிர்ப்புப் போராட்ட வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இவ்வாய்வு கோட்டையின் தோற்றம், பெயர்க்காரணம் மற்றும் சேதுபதி மன்னர்களுடனான தொடர்பை ஆராய்கிறது. வேலுநாச்சியார் மற்றும் மருது சகோதரர்களின் போராட்ட வரலாற்றில் கோட்டையின் பங்கு எடுத்துரைக்கப்படுகிறது. கி.பி. 1801 ஆம் ஆண்டு தென்னிந்தியக் கிளர்ச்சியுடன் கோட்டைக்குத் தொடர்புடைய வரலாற்றுச் செய்திகள் ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும், படைப் பயிற்சி, நீர்நிலை அமைப்பு, கட்டடக்கலை மற்றும் சுரங்கப்பாதைகள் குறித்த தகவல்கள் இடம்பெறுகின்றன. கோட்டையின் வரலாற்றுச் சிறப்பையும் புனரமைப்புப் பணிகளையும் இவ்வாய்வு எடுத்துரைக்கிறது. இறுதியாக, சங்கரபதி கோட்டையைப் பாதுகாத்து அதன் வரலாற்றுப் பாரம்பரியத்தை எதிர்காலத் தலைமுறையினருக்குக் கொண்டுசெல்ல வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படுகிறது.

**திருவுச் சொற்கள் (Keywords):** சங்கரபதி கோட்டை, மருது சகோதரர்கள், வேலுநாச்சியார், தென்னிந்தியக் கிளர்ச்சி, கி.பி. 1801, சிவகங்கைச் சீமை, வரலாற்றுப் பாரம்பரியம்

**முன்னுரை**

தமிழகத்தின் வரலாற்றில் சிவகங்கைச் சீமை தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் மற்றும் படை ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய வேலுநாச்சியார், மருது சகோதரர்கள் உள்ளிட்டோரின் செயல்பாடுகள் இப்பகுதியின் வரலாற்றுச் சிறப்பை எடுத்துரைக்கின்றன. சிவகங்கை அரசின் தோற்றம், அதன் அண்டை அரசுகளுடனான உறவுகள், கோட்டைகள், நீர்நிலைகள் மற்றும் படை அமைப்புகள் ஆகியவை அக்கால அரசியல் வரலாற்றை தென் தமிழகத்தின் பதினேழாம் மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டு வரலாறு, மதுரை நாயக்கர்கள், இராமநாதபுரம் சேதுபதிகள், சிவகங்கை மன்னர்கள், ஆற்காடு நவாப் மற்றும் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆகியோருக்கிடையிலான அரசியல் உறவுகளால்

வடிவமைக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் நடைபெற்ற படையெடுப்புகள், ***சங்கரபதி கோட்டை*** சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் இருந்து தேவகோட்டை செல்லும் சாலையில் உள்ளது சங்கரபதி காடு. இங்கு தான் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் 300 ஆண்டுகளைக் கடந்த பழமைவாய்ந்த சங்கரபதி கோட்டை உள்ளது. ஆங்கிலேயரை எதிர்த்து போரிட்ட ***மருது சகோதரர்கள் இக்கோட்டையில் வைத்துதான் வீரர்களுக்கு பயிற்சி அளித்தனர்***. போரின் போது பாதுகாத்துக் கொள்ள சங்கரபதி காட்டில் 5 ஏக்கர் பரப்பளவில் குளத்தை வெட்டி அதில் பயிற்சி எடுத்துள்ளனர். சங்கரபதி கோட்டைக்கு மிகபெரிய வரலாறு இருக்கிறது. இராமநாதபுரம் மன்னர் சேதுபதிக்கு மிகவும் விருப்பமான இடமாக இந்த கோட்டை இருந்தது. இது இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றை மட்டுமல்லாது, இந்தியர்களின் பாரம்பரியக் கட்டடக் கலையின் சிறப்பையும் நினைவூட்டும் வரலாற்றுச் சின்னமாகத் திகழ்கிறது.

**தினமலர் நாளிதழ்**



சிதிலடைந்த கோட்டையை ஆய்வு செய்து. மேலும், தினமலர் நாளிதழ் 28-3-2022 ல் வெளியிட்டு இருந்தேன் அந்த செய்தி தினமலர் நாளிதழில் வந்த புகைப்படமும் வெளியில் வந்த நிலையில் தற்போது ***தமிழக அரசு கடந்த 2024 ல் சட்டசபை நிதி ஒதுக்கப்பட்டு 9.03 கோடி ரூபாயில் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது*** புதிய படமும் இது என்னுடைய ஆய்வில் கிடைத்த ஒரு வெற்றி என்று சொல்லலாம்.

**பெயர்க் காரணம்**

இராமநாதபுரம் சீமையை ஆண்டு வந்த மன்னர் சேதுபதிக்கு விருப்பமான தலமாக இக்கோட்டை இருந்து வந்துள்ளது. அப்போதுதான் இவருக்கு 200 குதிரைகளுக்குள் பயிற்சியும் அந்த குதிரைகளை பராமரிக்க திறமையான ஆள் தேடிய சேதுபதிக்கு சிவகங்கை சமஸ்தானத்தோடு நெருங்கிய நட்புகொண்ட ***ஹைதர் அலி தன் தளபதியான சங்கரபதியை அணுப்பி வைத்துள்ளார்.*** சங்கரபதியும் இக்கோட்டையில் தங்கி குதிரைகளுக்கு போர்பயிற்சி வழங்கினார். இதனாலேயே இந்தவனப்பகுதியும் கோட்டையும் சங்கரபதி கோட்டை என்று பெயர் பெற்றுள்ளது.

**ரகுநாத சேதுபதி -- திருமலை நாயக்கர் வரலாற்றுப் பின்னணி**

1656 ஆம் ஆண்டு மன்னர் திருமலை நாயக்கர் ஆட்சிக் காலத்தில், மைசூர் படைகள் கம்பையா என்ற தளபதியின் தலைமையில் மதுரையைத் தாக்கிய பொழுது, இராமநாதபுரம் பகுதியை நிர்வகித்து வந்த முதலாம் ரகுநாத சேதுபதி திருமலை நாயக்கருடன் இணைந்து மைசூர் படைகளைத் தோற்கடித்தார். இந்த வெற்றியில் மகிழ்ச்சியடைந்த மன்னர் திருமலை நாயக்கர், ரகுநாத சேதுபதிக்குத் திருமலைச் சேதுபதி என்ற பட்டத்தையும், இராமநாதபுரத்துச் சேதுபதிகள் இனி

மதுரை நாயக்கர்களுக்குக் கப்பம் கட்டத் தேவையில்லை என்ற வரிவிலக்கு உரிமையையும் கொடுத்தார்.

***மதுரை நாயக்கர் சேதுபதிக்கு நட்பின் நிமித்தமாக மதுரை நாயக்கர் மஹால் போல் சங்கரபதி கோட்டை கட்டி கொடுத்தாக கூறப்படுகிறது*** சிறிய மஹால் அமைந்த பகுதி இராமநாதபுரச் சேதுபதிகளின் முழுக் கட்டுப்பாட்டில் வந்தது. பின்னர், இம்மஹால் சேதுபதி மன்னர்களின் மாளிகையாகவும் வேட்டையாடும் இடமாகவும் இருந்திருக்க வேண்டும். மேலும், குன்றக்குடி கோயிலில் தரிசனம் செய்யவும் மக்களின் பாதுகாப்புக்காகவும் இக்கோட்டை பயன்பட்டிருக்க வேண்டும்.

**வேலுநாச்சியாருக்குச் சீதனமாக வழங்கப்பட்ட சங்கரபதிக் கோட்டை**

மாமன்னர் சேதுபதி தன்னுடைய புதல்வியான வேலுநாச்சியாரை சிவகங்கை சீமை மன்னர் முத்துவடுகநாதருக்கு திருமணம் செய்து கொடுத்து ***தனது விருப்பமான கோட்டையான சங்கரபதிக் கோட்டையை சீதனமாகக் கொடுத்தார்.*** வேலுநாச்சியாரின் படை தளபதிகளாக சின்னமருதுவும் பெரியமருதுவும் இருந்தனர். வெள்ளைக்காரனுக்கு அடிபணியாத மன்னராக ஹைதர் அலி இருந்ததால் வேலுநாச்சியாரும் ஹைதர் அலியும் இணைந்து வெள்ளைக்காரர்களைத் தாக்க திட்டமிட்டார்கள். **ஆங்கிலேயர்களுடன் போர் செய்ய *வேலுநாச்சியார் படையும் ஹைதர் அலி படையும் போர் பயிற்சி பெற்றது சங்கரபதி கோட்டையில்தான்.*** இந்தக் கோட்டையில் இருந்து காளையார் கோவில் பகுதியில் உள்ள காளீஸ்வரர் கோயில் திருமயம் கோட்டை ஆகிய இடங்களுக்கு சுரங்கப்பாதைகள் உண்டு. ***இந்த கோட்டையின் முகப்பை வெள்ளையர்கள் பீரங்கியால் தகர்த்து விட்டனர் தற்போத சேதமைடைந்து இருக்கின்றது.***

1746 ஆம் ஆண்டு, செல்லமுத்துச் சேதுபதியின் மகளான வேலுநாச்சியாரைச் சிவகங்கைச் சீமையின் மன்னரான முத்து வடுகநாதர் மணமுடித்துக் கொண்டார். இதனால், மன்னர் செல்லமுத்துச் சேதுபதியால் ***இச்சிறிய மஹால்*** சீதனமாகச் சிவகங்கைச் சீமைக்கு வழங்கப்பட்டது. இத்திருமணம் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை அரச குடும்பங்களுக்கிடையிலான உறவை வலுப்படுத்தியது. மஹாலின் அழகு முத்து வடுகநாதரைப் பெரிதும் கவர்ந்தது.

**காளையார்கோயில் போர் கி.பி. 1772**

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியும் ஆற்காடு நவாபும் சிவகங்கை அரசின் மீது அரசியல் மற்றும் பொருளாதார அழுத்தங்களை ஏற்படுத்தினர். இதனால் முத்து வடுகநாதப் பெரிய உடையத்தேவருக்கும் ஆங்கிலேயர்–நவாப் கூட்டணிக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. சிவகங்கை மாவட்ட நிர்வாகத்தின் வரலாற்றுக் குறிப்பின்படி, 1772 ஜூன் மாதத்தில் ஆங்கிலேயப் படைகள் சிவகங்கை மற்றும் காளையார்கோயில்

***தேவகோட்டை சங்கரபதி கோட்டை*** பகுதிகளில் தாக்குதல் மேற்கொண்டன. ஜூன் 25-ஆம் தேதி காளையார்கோயில் பகுதியில் நடைபெற்ற போரில் முத்து வடுகநாதத் தேவர் கொல்லப்பட்டார். இந்நிகழ்வு சிவகங்கை அரசின் வரலாற்றில் முக்கியத் திருப்புமுனையாக அமைந்தது. கணவரை இழந்த வேலுநாச்சியார் தனது மகள் வெள்ளச்சி நாச்சியாருடன் பாதுகாப்பான இடத்திற்குச் சென்றார். பின்னர் சிவகங்கை அரசை மீட்டெடுப்பதற்கான போராட்டத்தைத் தொடங்கினார்.

**வேலுநாச்சியார் மற்றும் சிவகங்கை மீட்புப் போராட்டம் கி.பி. 1772–1780**

வேலுநாச்சியார் தனது அரசாட்சியை மீட்டெடுப்பதற்காகப் பிராந்திய அரசியல் கூட்டணிகளை உருவாக்கினார். ஹைதர் அலியின் உதவியை நாடியதுடன், மருது சகோதரர்கள் உள்ளிட்ட உள்ளூர் தலைவர்களின் ஆதரவையும் பெற்றார். இக்காலத்தில் படை வீரர்களைத் திரட்டுதல், ஆயுதங்களைப் பெறுதல், போர்ப் பயிற்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஆங்கிலேயர்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்தல் போன்றவை ***சங்கரபதி கோட்டையில்*** இருந்து திட்டம் செய்யபட்டன .வீரம் நிறைந்த வேலுநாச்சியார், தன்னுடைய கணவரான மன்னர் முத்து வடுகநாதரை வஞ்சகமாகக் கொலை செய்த ஆங்கிலேயர்களைப் பழிதீர்க்கவும், சிவகங்கைச் சீமையை மீட்கவும் முயன்றார். தமது தலைமையின் கீழ் செயல்பட்ட பிரதானி தாண்டவராயன் பிள்ளை, மாவீரர்கள் மருதுபாண்டியர்கள் ஆகியோருடன் இணைந்து, மைசூர் மன்னர் ஹைதர் அலியின் உதவியைப் பெற்று 1780 ஆம் ஆண்டு சிவகங்கைச் சீமையை மீட்டார். 1780 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களை எதிர்த்துப் பெற்ற வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ளவும், தமது படைகளை மேலும் வலிமைப்படுத்தவும் வேலுநாச்சியார் ஹைதர் அலியின் உதவியை நாடினார். படைகளுக்குப் பயிற்சி அளிப்பதற்குப் பாதுகாப்பான இடங்களைத் தேர்வு செய்தபோது, ***பீரங்கிப் பயிற்சிக்குப் பிரான் மலையையும், யானை மற்றும் குதிரைப் பயிற்சிக்குச் சங்கரபதி கோட்டை அமைந்த பகுதியையும் தேர்வு செய்தார்.***

அங்கு பாதுகாப்பு வீரர்கள் தங்குவதற்கும், போர்க் கருவிகளைப் பாதுகாப்பதற்கான அறைகள் மற்றும் பயிற்சிக்கான இடங்களும் ஒதுக்கப்பட்டன. மஹாலுக்கு அருகில் கோட்டை கட்டப்பட்டது. இங்கு போர்ப் பயிற்சி அளிப்பதற்காக ஹைதர் அலியின் படையிலிருந்து சங்கரபதி என்பவர் நியமிக்கப்பட்டு, கோட்டை அவரது கட்டுப்பாட்டில் விடப்பட்டது. இதனால், இம்மஹால் அமைந்த கோட்டை சங்கரபதிக் கோட்டை என்று அழைக்கப்படுகிறது.

**ஊமைத்துரைக்கு மருது சகோதரர்கள் அடைக்கலம் அளித்த நிகழ்வு**

1799 ஆம் ஆண்டு, பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரான கட்டபொம்மன் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்ட பின்னர், அவரது தம்பி ஊமைத்துரைக்குச் சிவகங்கைச் சீமையின் மருது சகோதரர்கள் அடைக்கலம் கொடுத்தனர்.

ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்ததற்காக சின்னமருது மேல் கலெக்டர் எஸ்.ஆர்.லூஷிங்டன் ஆத்திரமும் கோபமும் கொண்டார். கர்னல் அக்னியூ ஒரு தந்திரம் செய்து 17.06.1801-ல் ஒரு பிரகடனத்தை வெளியிட்டு அதில் "சின்னமருது மற்றும் அவரது கூட்டாளிகளுடன் யாரும் தொடர்பு கொண்டிருந்தால் அவர்கள் குற்றவாளியாகக் கருதப்படுவார்கள் என்று அறிவித்தார்". ஊமைத்துரைக்கும் அவர்களது வீரர்களுக்கும் அடைக்கலம் கொடுத்த சின்னமருதுவை ஆங்கிலேயர்கள் கண்டனம் செய்தனர். பெரியமருதுவிற்குத் தெரியாமல் இக்காரியம் நடைபெறுகிறது என்று கர்னல் அக்னியூ கூறினார் இதனால் ஆங்கிலேயர்கள் கோபமடைந்தனர். 1800 மற்றும் 1801 ஆம் ஆண்டுகளில் மதுரையிலிருந்து திருப்பத்தூர் வழியாகவும், தஞ்சையிலிருந்து காரைக்குடி மற்றும் காளையார்கோயில் வழியாகவும் சிவகங்கையைத் தாக்கினர். ***இந்தப் போரில் சங்கரபதி கோட்டையில்*** இருந்த வீரர்களும் கோட்டையும் பாதிக்கப்பட்டன. ஆங்கிலேயர்களின் அரசியல் விரிவாக்கத்திற்கு எதிராக மருது சகோதரர்களின் எதிர்ப்பு மற்றும் ஆங்கிலேயப் படைகளின் நடவடிக்கைகள் தென் தமிழகத்தில் பல இடங்களில் மோதல்களை ஏற்படுத்தின.

**1801 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிரான போரும் கோட்டையின் அழிவும்**

1801 ஆம் ஆண்டு, ஆங்கிலேயத் தளபதி கர்னல் அக்னியூ என்பவர் தலைமையில் ஆங்கிலேயப் படைகள் தஞ்சையிலிருந்து புறப்பட்டு, காளையார்கோயிலை அடைவதற்காகக் காரைக்குடி வழியாக வந்தபோது, கர்னல் அக்னியூ படைகள் சங்கரபதிக் கோட்டையில் இருந்த சிவகங்கைப் படைகளைத் தாக்கின. இப்போரில் ஊமைத்துரையும் 3000 படை வீரர்களும் ஆங்கிலேயப் படைகளைத் தீவிரமாக எதிர்த்துப் போரிட்டனர். ஆனால், இப்போரில் ***சங்கரபதி கோட்டை பீரங்கிக் குண்டுகளால் முற்றிலும் தகர்க்கப்பட்டது.*** மஹாலுக்கு அருகில் கிடக்கும் கோட்டையின் சிதைவுகள் இதற்குச் சான்றாக உள்ளன. இப்போரில் ஊமைத்துரை ஆங்கிலேயப் படைகளிடமிருந்து தப்பி, திருப்பத்தூர் வழியாகச் சிங்கம்புணரிக் காட்டுப் பகுதிகளுக்குத் தப்பிச் சென்றார்.

**கருப்பட்டி கடுக்காய் சுவர்**

மதுரையில் புகழ்பெற்ற திருமலை நாயக்கர் மஹாலைப் போலவே சங்கரபதி கோட்டையின் தூண்களும் வலிமை வாய்ந்தவை. இதற்குக் காரணம் அக்காலத்திலேயே செங்கற்கள் கடுக்காய் கருப்பட்டி முட்டை ஆகியவற்றை கலவையாகக் கொண்டு ***சங்கரபதி கோட்டைச்*** சுவர்களும் தூண்களும் கட்டப்பட்டதுதான். 300 நூற்றாண்டுகளைக் கடந்தும் இன்றும் இக்கோட்டை தன் கம்பீரத்தை இழக்காமல் நிற்கிறது .



**சுரங்கப் பாதை**

ஆங்கிலேயர்களின் திடீர் தாக்குதலில் இருந்து தப்பிக்க ***சங்கரபதி கோட்டையில்*** இருந்து காளீஸ்வரர் கோவில் திருமயம் கோட்டை ஆகிய பகுதிகளுக்குச் செல்ல சுரங்கப் பாதையினையும் அமைத்துள்ளதாக கூறப்படுகின்றது. மருது சகோதரர்கள் வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பியான ஊமைத்துரை இச்சுரங்கத்தில் தான் மறைந்திருந்ததாக கூறப்படுகின்றன.

**யானைப் மற்றும் குதிரை படைகள் துப்பாக்கிப் பயிற்சிகளுக்கான சான்றுகள்**

**யானை பாதை**



சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்து போரிடுவதற்காக மாபெரும் படையைத் திரட்டினர். அவற்றில் யானை படைகளுக்கும் குதிரைப் படைகளுக்கும் ***சங்கரபதி கோட்டையில் வைத்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது***. ***யானைகள் இறங்குவதற்கு குளத்தில் படிக்கட்டுகள் இல்லாமல் யானை பாதை கரையில் இருந்து குளத்தில் இறங்குவதற்கு இன்றும் இருக்கிறது***. யானைப்படைகள் பயன்பாட்டிற்கு உள்ள தெப்பக்குளம் ஆதாரம் தற்போது இந்த குளம் தண்ணீர் நிரம்பியும் 5 ஏக்கர்க்கு மேல் இருக்கிறது வீரத்திலும் விவேகத்திலும் தன்னிகரற்றவர்களாக சின்னமருதுவும் பெரியமருதுவும் விளங்கினர். இவர்களின் படைத்தளங்களில் ஒன்றாக விளங்கியது சங்கரபதி கோட்டை. அடர்ந்த காட்டின் நடுவில் இந்த கோட்டை அமைந்துள்ளது. குளத்தின் சுவர்கள் 25 அடி உயரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன. மேலும் துப்பாக்கிக் குண்டுகள், ஆங்கிலேயர்களுடன் போர் நடைபெற்றபோது அவர்கள் பயன்படுத்திய குண்டுகள் ஆகியவை இன்றும் இப்பகுதியில் காணக் கிடைக்கின்றன. இந்த கோட்டையை ஒட்டி உள்ள குளம்போன்ற அமைப்பில் மிகப்பெரிய படைத்தளம் இருந்துள்ளது. இங்கு ஆங்கிலேயரின் படைகளை திணறடித்து மறைந்திருந்து தாக்கும் கொரில்லா போர்முறையில் மற்றும் யானை குதிரைப்படைகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

**நிலத்தடி சுரங்கப்பாதைகள் குறித்த கள ஆய்வுத் தகவல்கள்**

இக்கோட்டையின் மேற்குப் பகுதியிலிருந்து தெற்கு நோக்கி அமைந்துள்ள ***சுரங்கப்பாதை, அங்கிருந்து சுமார் 5 கி.மீ. தள்ளியுள்ள காட்டுப் பகுதியில் கல்லுவயல் என்ற இடத்தில் முதலில் வெளியேறும் இடத்தைக் கொண்டுள்ளது. அதிலிருந்து கிழக்கு நோக்கிச் சுமார் 5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள தென்னிவயல்*** பகுதியில் இரண்டாவது வெளியேறும் சுரங்கப்பாதையும் அமைந்திருக்கிறது என்பது கள ஆய்வில் தெரியவந்தது.

**மஹாலின் பயன்பாடு**



இம்மஹால் சேதுபதி மன்னர்களின் ஓய்வு மாளிகையாகவோ அல்லது வேட்டையாடும் பயணங்களின்போது தங்கும்இடமாகவோ பயன்படுத்தப்பட்டிருக்கலாம். மேலும், குன்றக்குடி கோயிலுக்குச் செல்லும் அரச குடும்பத்தினர் தங்குவதற்கும், சுற்றுப்புறப் பகுதிகளைக் கண்காணிப்பதற்கும் இக்கட்டடம் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

**சங்கரபதி** கோட்டை **மற்றும் சுரங்கப்பாதைகள்**



***சங்கரபதி*** கோட்டையைப் பற்றிய குறிப்பிடத்தக்க செய்திகளில் ஒன்று, இங்கிருந்து காளையார்கோவில் காளீஸ்வரர் கோயில் மற்றும் திருமயம் கோட்டை போன்ற இடங்களுக்குச் சுரங்கப்பாதைகள் இருந்ததாகக் கூறப்படுவது ஆகும். ஆங்கிலேயர்களின் திடீர் தாக்குதல்களிலிருந்து தப்பிக்கவும், வீரர்கள் பாதுகாப்பாக இடம் மாறவும் இத்தகைய சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டதாக விளக்குகின்றன. வீரபாண்டிய கட்டபொம்மனின் சகோதரர் ஊமைத்துரை, ஆங்கிலேயர்களிடமிருந்து தப்பிய பின்னர் மருது சகோதரர்களின் ஆதரவைப் பெற்றார் என்பது சிவகங்கை மாவட்ட நிர்வாகத்தின் வரலாற்றுப் பதிவிலும் குறிப்பிடப்படுகிறது.

**மருது சகோதரர்களின் நீர்மேலாண்மை தெப்பக்குளம் முக்கியத்துவம்**



சங்கரபதி கோட்டையை ஒட்டியுள்ள பெரிய குளம் போன்ற நீர்நிலை அமைப்பு, இத்தளத்தின் மற்றொரு முக்கிய அம்சமாகக் கூறப்படுகிறது. இந்நீர்நிலை முன்பு சுமார் 15 ஏக்கர் பரப்பளவைக் கொண்டிருந்ததாகவும், தற்போது நீர் நிரம்பிய நிலையில் ஐந்து ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கோட்டைக்கு எதிரே உள்ள குளத்தின் கரையில் சாய்வான இறங்குதளம் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. யானைகள் மற்றும் குதிரைகள் நீர்நிலையை அணுகுவதற்காக இந்த அமைப்பு போர்க்காலங்களிலும் மற்றும் எதிர்காலம் மக்களின் பயன்பாட்டிற்காகவும் மருது சகோதரர்களின் குளம் நீரின் முக்கியத்துவத்தையும் இதில் காணலாம் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் .

**முடிவுரை**

சங்கரபதி கோட்டை, சிவகங்கை மாவட்டத்தின் வரலாற்றுப் பாரம்பரியத்தையும், தமிழகத்தின் தொடக்ககால ஆங்கிலேய எதிர்ப்புப் போராட்டங்களையும் எடுத்துரைக்கும் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகத் திகழ்கிறது. வேலுநாச்சியார், மருது சகோதரர்கள் மற்றும் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிரான ஆயுதப் போராட்டங்கள் தொடர்பான வரலாற்றுச் செய்திகளை ஆராய்வதற்கு

இக்கோட்டை குறிப்பிடத்தக்க களமாக அமைகிறது. குதிரை மற்றும் யானைப் படைகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டதாகக் கூறப்படும் செய்திகள், சேதுபதி மன்னர்களுடனான தொடர்பு, வேலுநாச்சியாருக்குச் சீதனமாக வழங்கப்பட்டதாக நிலவும் தகவல், சுரங்கப்பாதைகள் மற்றும் கட்டடத் தூண்களின் அமைப்பு ஆகியவை இதன் வரலாற்று ஆய்வில் கவனம் பெறுகின்றன. கி.பி. 1801ஆம் ஆண்டு நடைபெற்ற தென்னிந்தியக் கிளர்ச்சியின் (South Indian Rebellion) பின்னணியில், மருது சகோதரர்கள் முன்னெடுத்த ஆங்கிலேய எதிர்ப்புப் போராட்டத்துடன் சங்கரபதி கோட்டை முக்கிய இடம் பெறுகிறது. கோட்டையின் சிதிலமடைந்த நிலை மற்றும் அதன் பாதுகாப்புத் தேவையை எடுத்துரைத்து, *தினமலர்* நாளிதழில் 28.03.2022 அன்று செய்தி வெளியிடப்பட்டது. இச்செய்தி, வரலாற்றுச் சின்னத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைப் பொதுமக்கள் மற்றும் அரசுத் தரப்பினரின் கவனத்திற்குக் கொண்டுசென்றது. தற்போது இங்கு புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவை நிறைவடைந்த பின்னர், அடுத்த இரண்டு மாதங்களுக்குள் பொதுமக்களின் பார்வைக்காகக் கோட்டை திறக்கப்பட்டு, சுற்றுலாத் தலமாகப் பயன்பாட்டிற்கு வர இருக்கிறது. இம்முயற்சி, வரலாற்றுச் சின்னத்தின் பாதுகாப்புடன் அதன் பண்பாட்டு மதிப்பையும் எதிர்காலத் தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல உதவும்.

1801ஆம் ஆண்டு நடைபெற்ற தென்னிந்தியப் புரட்சியை, 1857ஆம் ஆண்டு நடைபெற்ற சிப்பாய்க் கலகத்திற்கு முன்னதாக ஆங்கிலேயக் காலனித்துவ ஆட்சிக்கு எதிராக நிகழ்ந்த முக்கியமான ஆயுதமேந்திய எதிர்ப்புப் போராட்டமாகக் கருதலாம். இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மருது சகோதரர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. இப்புரட்சியில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடுவதற்கான முக்கியத்துவம் வாய்ந்த இடமாகச் சங்கரபதி கோட்டை விளங்கியது. இந்தியப் விடுதலைப் போராட்ட வரலாற்றில் மருது சகோதரர்கள் ஆற்றிய பங்கு தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.

**நூற்பட்டியல்**

## References

பி.ஆர். சந்திரன் (2010) தேரும் போரும் பாண்டிய நாட்டு போர் குடியினர் வரலாறும் பண்பாடும் , யாழினி பதிப்பகம் நூல் உலகம் வெளியீடு

கமால் .எஸ்.எம். (1997) சீர்மிகு சிவகங்கை சீமை பசும்பொன் மாவட்ட கலை இலக்கிய வரலாற்று ஆய்வு மையம் சிவகங்கை

கு . மங்கையர்கரசி (2023) மருது பாண்டியர் வரலாறும் வழிமுறையும் புத்த பப்ளிகேஷன்ஸ் சென்னை

மு . பாலகிருஷ்ணன் (2023) விடுதலைப் போரைத் தொடங்கிவைத்த வீர மருது பாண்டியர் வானவில் புத்தகாலயம்

நெல்லை S ஜனா (சிவகங்கையின் வீரமங்கை வேலுநாச்சியார் பதிப்பகம்: விஜயபாரதம் பதிப்பகம்

தங்க .செங்கதிர் (2025) சிவகங்கை - போர்க்களமும் தொன்மை நிலமும் சந்திய பதிப்பகம்

சிவகங்கை மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு அரசு. “வரலாறு – சிவகங்கை மாவட்டம்.” https://sivaganga.nic.in/about-district/history/

சிவகங்கை மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு அரசு. “சிறப்புப் பெற்ற ஆளுமைகள்: வேலுநாச்சியார் மற்றும் மருது சகோதரர்கள்.” https://sivaganga.nic.in/tourism/eminent-personalities/

Census of India. District Census Handbook: Sivaganga, Tamil Nadu. Directorate of Census Operations, Tamil Nadu.

தினமலர். “அடர்ந்த காட்டுக்குள் சங்கரபதி கோட்டை வரலாற்றுச் சிறப்பு வாழ்விழந்து நிற்கிறது.” சங்கரபதி கோட்டை தொடர்பான செய்திக் கட்டுரை.

யோகி சுதந்திரக் கனல் (2025) வீரத் தேவன் வரலாறு ( மருது பாண்டியர்களின் போராட்ட வரலாறு)யங்மைன்ட்ஸ் பப்ளிஷர்ஸ் சென்னை

சிவரஞ்சன் (2014) விடுதலைப் போரில் தமிழ்ச் செம்மல்கள் கிளாசிக் பப்ளிகேஷன்ஸ் சென்னை

த.ஸ்டாலின் குணசேகரன் (2019) தேச விடுதலையும் தியாகச் சுடர்களும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை

சூறாவளி பொ.லெட்சுமணன் (2013) சும்மா வரவில்லை சுதந்திரம் நீதி நிலையம் தேவகோட்டை

Prof.K Rajayyan (2005) Tamilnadu A Real History Ratana Publications Trivandrum

Sivagangam Ma (1970) Viduthalai Poril Thamizh Vararntha varalaru (Tamil) Madras

District Census Handbook, Sivagana, Tamil Nadu, 2011

Government of Information and Public Relations Department, Sivaganga, 07.11.2017.

The Hindu, 04.01.2016

Government of Information and Public Relations Department, Sivaganga, 07.11.2017.

J.Welsh , Military Reminiscences,vol.1Lindon 1830 p.61

Madras Council,9June1804, Military Consulations,Vol.284

G.O .Ms .No.2523, Public (political.A) 14-11-1980

Madras Council 11,March 1801,&13 April 1802,ibid vol.280 p1469

Personal Interview with Pandian, a Direct Descendant of the Marudhu Pandiyar Brothers, conducted in 2020.